# ஸ்டாலினின் வெற்றிப் பயணம்!



“நமக்கு நாமே பயணத்தைப் பற்றிய செய்திகள் தமிழக மக்களிடம் பரவி ஆளுங்கட்சியினரிடையே பீதியை ஏற்படுத்தத் தொடங்கியது. அதே நேரத் தில் உயர்ந்த இடத்திலே இருப்பவர்களும். அரசிலே உள்ள மூத்த அதிகாரிகளும் “நமக்கு நாமே” பயணத்தைப் பற்றிய செய்திகளைப் பரிமாறிக் கொள்ள ஆரம்பித்தார்கள். பயணத்தின் ஒவ்வொரு நாள் காலையிலும் ஸ்டாலின் என்னைத் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, முதல் நாள் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளையெல்லாம் எடுத்துச் சொல்லும் போது. ஒரு புறம் மகிழ்ச்சியாக இருந்தாலும், அவனது மெலிந்த உடல் இதையெல்லாம் தாங்கிக் கொள்ளுமா என்று எனக்கு நானே எண்ணிக் கவலைப்பட்டாலும், அதை வெளியே காட்டிக் கொண்டதில்லை.

தம்பி ஸ்டாலின் தமிழகம் முழுதும் 234 தொகுதிகளிலும் மேற்கொண்ட “நமக்கு நாமே” விடியல் மீட்புப் பயணம் நமது கழக உடன்பிறப்புகளுக்கிடையே எழுச்சியையும். மக்களிடையே நம்பிக்கை கலந்த விழிப்புணர்ச்சியையும், நடுநிலையாளர்களிடையே நல்லெண்ணத்தையும், எதிர்க்கட்சியினரிடையே மருட்சியையும், பத்திரிகைகள் உள்ளிட்ட ஊடகத்தாரிடையே ஆக்கப்பூர்வமான ஆர்வத்தையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது என்றால் அது மிகையல்ல.

**“நமக்கு நாமே'' என்ற பெயரே எல்லோருடைய இல்லங்களிலும் இரண்டறக் கலந்துவிட்ட சொல்லாகியிருக்கிறது. மொத்தத்தில் ஸ்டாலினின் இந்தப் பயணம் “வெற்றிப் பயணம்; கழக வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய புதுமைப் பயணம்: இந்தப் பயணம்; தம்பி ஸ்டாலினின் அரசியல் வாழ்க்கையில் மிக முக்கியமானதொரு மைல் கல்!”**

**- முத்தமிழறிஞர் கலைஞர்**

# தமிழ்மக்களின் மனதில் இடம் பெற்றிருப்பவர் ஸ்டாலின்!



“ஸ்டாலின் இளைஞரணி மூலம் மட்டுமே அறியப்பட்ட தலைவரல்ல. பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப் பட்டவரும்கூட. இளமையில் தலைவர் எப்படி உழைத்தாரோ. அதேபோல் தளபதி ஸ்டாலின் அவர்களின் உள்ளத்திலும் தி.மு.கழகத்தின் கொள்கைகளால் தாக்கங்கள் ஏற்பட்டன. அன்று தி மு.க.வில் கொண்டாடப்படுகின்ற முக்கியமான விழாக்கள் பொங்கல் விழா, அண்ணா பிறந்த நாள் விழாக்கள்தான். எனவே, தளபதியும் அந்தக்காலத்திலே, தான் வாழ்கின்ற வட்டத்தில், கழகத்தின்பால் பற்று கொண்ட இளைஞர்களையும், நண்பர்களையும் ஒன்று திரட்டி கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. அமைப்பின் மூலம் அண்ணா பிறந்த நாள் விழாவினை 1966ஆம் ஆண்டு முதற்கொண்டு நடத்தி வந்தார்.

**என்னுடைய மனதில் எதிர்கால வரலாற்றை கலைஞரைத் தொடர்ந்து தம்பி ஸ்டாலின்தான் வரைய இருக்கிறார் என்ற நம்பிக்கை இருக்கிறது ஒருவேளை எழுத்திலே வரையாவிட்டாலும் தமிழ் மக்களுடைய மனதிலே வரையக் கூடிய ஆற்றல் தம்பி ஸ்டாலினுக்கு உண்டு."**

**- இனமானப் பேராசிரியர்**

# வாழிய தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் நலம்!

அன்புச் சகோதரரும் இனிய நண்பருமான தலைவர் முதல்வர் ஸ்டாலினுக்கு, இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

தலைவர் பல்லாண்டு காலம் வாழ்வாங்கு வாழ்ந்து, தமிழர்களின் வாழ்வு செழித்தோங்க நலமுடன் பாடுபட இனமானப் பேராசிரியர் இல்லத்து வாழ்த்துக்கள்.

இவ்வாண்டின் சிறப்பு, தந்தை பெரியார் 1925 ஆம் ஆண்டு தொடங்கிய சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு. சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய குறிக்கோள்களான சமுதாயத்தில் சமதர்மம் முழுமையாக நிறைவேற்றப்பட திராவிட மாடல் நாயகரின் தலைமையில் இன்னும் ஒரு கால் நூற்றாண்டு திராவிட மாடல் ஆட்சி நடைபெறுதல் தமிழுக்கு, தமிழருக்கு, தமிழ்நாட்டுக்கு பெரும் நலம் பயக்கும்.

அறிஞர் அண்ணாவின் உயிர் மூச்சுக் கொள்கையான மாநில சுயாட்சி கோரிக்கையை நிறைவேற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அமைத்த ராஜமன்னார் குழு அறிக்கையை பரிசீலித்து அதன் மீது தமிழக சட்டமன்றத்தில் மாநில சுயாட்சி தீர்மானம் வெளிவந்த ஐம்பத்து ஒன்றாவது ஆண்டு இது.

இவ்விரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளோடு, தளபதியின் பிறந்த நாளும் சேர்ந்து பெரும் சிறப்பை பெறுகிறது.

தி.மு.க.வின் மூலவர்களான பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞரின் குறிக்கோள்களை தளபதி சீரான முறையில், கொள்கைகளில் சிறிதும் சமரசமற்ற நடவடிக்கைகளால், கழக முன்னோடிகளின் எண்ணம் நிறைவேற்ற சலியாது உழைப்பை நல்குகிறார்.

**ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்க முடையா னுழை. (குறள் 594)**



முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் உரை;

**உயர்வு, உறுதியான ஊக்கமுடையவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களிடம் போய்ச் சேரும்**

உறுதியான கொள்கைப் பற்று, அசராது உழைப்பு, சரியான திட்டமிடல் ஆகியவை தளபதி தலைவரின் தலைமை பண்புக்கு இலக்கணமாக திகழ்ந்து மேற்கூறிய குறளுக்கு ஒத்தாற் போல் உள்ளது.

சி வோட்டர் நிறுவனத்தின் இயக்குநர் யஷ்வந்த் தேஷ்முக் சமீபத்தில் அளித்துள்ள பேட்டியில் தலைவரின் செயல்பாடுகள் பற்றி மக்கள் தெரிவித்த கருத்துகளை தொகுத்து சமீபத்தில் வெளியிட்டுள்ளார். கழகத் தலைவர் பற்றிய மக்களின் கருத்து பின்வருமாறு; -

- தி.மு.க. தலைவருக்கு எதிராக எந்த அதிருப்தியும் மக்களிடம் இல்லை.
- முதல்வர் ஸ்டாலின் செல்வாக்கான தலைவராக உள்ளார்.
- இந்தியாவின் தலைசிறந்த முதல்வர்களுள் ஐவரில் ஒருவராக தொடர்ந்து திகழ்கிறார். ஒவ்வொரு ஆறுமாதத்திற்கு ஒரு முறை மக்களிடம் கருத்துக் கேட்டாலும் தொடர்ந்து தலைசிறந்த முதல்வர்களில் ஒருவராக திகழ்கிறார். இது ஒரு மகத்தான சாதனை.
- தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக உழைக்கும் தலைசிறந்த முதல்வராக தொடர்ந்து திகழ்கிறார்.
- திராவிட அரசியல் தேசிய அரசியல் ஆகிய இரண்டையும் தி.மு.க. மிக அழகாகக் கையாண்டு வருகிறது.
- தமிழ்நாட்டு மக்கள் முதல்வர் மு.க. ஸ்டாலின் மீது மிகவும் நம்பிக்கை வைத்துள்ளனர். இந்த நம்பிக்கை அவர் வாரிசு அரசியல்வாதி என்பதால் வரவில்லை. அவரது தந்தையான முத்தமிழறிஞர் கலைஞரின் மகன் என்பதால் வரவில்லை. **ஸ்டாலினுக்கே தனியான ஈர்ப்பு சக்தி இருக்கிறது.**

இந்த ஆய்வில் குறிப்பிட்ட மக்களின் மனம் கவர்ந்த தலைவராக திராவிட மாடல் கதாநாயகர் திகழ்வது தான் அவரின் தொடர் வெற்றிகளுக்கு காரணமாக திகழ்கிறது.

தலைவர் தளபதியின் களங்கமற்ற தமிழரின் நலம் காக்கும் செயற்பாடுகளை மக்கள் உணர்ந்ததனால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பாசிட்டிவ் வாக்குகளை மனமுவந்து அளித்து தங்களது ஆதரவை செலுத்துகின்றனர். பொதுமக்களின் அன்பை முழுமையாக பெற்றதன் விளைவுதான் **பாசிடிவ் வாக்குகளாக மாறுகிறது.**

**அ. அன்புச்செல்வன்**
பேராசிரியர் அவர்களின் புதல்வர்

திராவிட இயக்கத்தின் தாய் இயக்கமான, நீதிக்கட்சி, அனைத்து மக்களுக்கும் அரசியல், கல்வி, பொருளாதார வாய்ப்புகள் மற்றும் அடித்தட்டு மக்களின் சமூக நிலை உயர்த்தப்பட வேண்டும் என, இலக்கு வைத்து வேலை செய்தது அன்று, திராவிட இயக்க முன்னோடிகள் கண்ட கனவுகள் எல்லாம் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிகளின் போது திட்டங்களாக செயல் வடிவம் கண்டன. அந்த தலைவர்களின் கனவுகளை, இலக்குகளை நிறைவேற்றி அடுத்த கட்டத்திற்கு தமிழகத்தை கொண்டு செல்கிறது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் திராவிட மாடல் ஆட்சி.

திராவிட மாடல் ஆட்சியில் கொண்டு வரப்பட்டுச் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வரும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணத் திட்டம், பள்ளிக் குழந்தைகளுக்கான காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், ஊட்டச் சத்தை உறுதி செய் திட்டம் போன்ற எதிர்காலத்திலும் தொடரவிருக்கும் இந்தத் திட்டங்களால் தமிழர் நலம் பேணப்படும் என்பது திண்ணம்.

தொழில் தொடங்க சாதகமான சூழலை முதலீட்டாளர்கள் எதிர்பார்ப்பார்கள் என்பதனை அறிந்த முதல்வர் அவர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய உறுதி பூண்டுள்ளார். இந்த உறுதியை கண்ட முதலீட்டாளர்களும், தொழில் முனைவோர்களும் தமிழ்நாட்டை நோக்கி படையெடுத்து வருகிறார்கள். இதன் விளைவு தமிழ்நாடு இளைஞர்களின் வேலைவாய்ப்பு கனவு நனவாகி வருகிறது. சுமார் 31 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

வரலாற்றில் திராவிட மாடல் அரசும், அதை வழிநடத்தும் கழகத் தலைவரின் பெயரும் அழிக்க முடியாதபடி என்றென்றும் நிலைத்திருக்கும்.

2026 ஆம் ஆண்டில் தங்கத் தளபதியின் வெல்வோம் 200, படைப்போம் வரலாறு என்ற முழக்கத்தினை வெற்றி கான அனைவரும் சேர்ந்து சீரிய உழைப்பை நல்குவோம். வெற்றிச் சரித்தரம் படைப்போம். இதுவே நமது தலைவருக்கு தரும் பிறந்தநாள் பரிசாக அமையும். தலைவரை மீண்டும் முதல்வராக்குவோம்.

**வாழிய தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் நலம்!**

**வளர்க அவரது புகழ்!**

**வெல்க தி.மு.க.!**

**படைப்போம் வரலாறு!**